[மாண்புமிகு பேரவைத் தலைவர்] [1989 நவம்பர் 1

பிரிவுகள் 2 முதல் 18 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1 முகப்புரை, நெடுத்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

" 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 36/1989) நிறைவேற்றப் பெற வேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

## 7. அரசினர் தீர்மானம்.

### பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் விதி 30(3)-ன் கீழ் நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம்-4. அரசினர் சட்ட முன் வடிவுகள் (ஆய்வு செய்தல்) என்ற தலைப்பின்கீழ், வரிசை எண். 5. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 37/1989) என்று உள்ளதை நாளை (2-11-1989) எடுத்துக் கொள்ளலாம். ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.